## ஹிங்குரக்கொட பிரதேச சபை - 2020

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

ஹிங்குரக்கொட பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக நிதிக்கூற்றுக்கள் ஹிங்குரக்கொட பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் பாதகமானதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள்தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) வடமத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் வினியோகிக்கப்பட்ட 2019 திசெம்பர் 31 ஆந் திகதிய 2019/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் புதிய கணக்கீட்டு முறைமையின் படி சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தமையால் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) ஈ (iii) உப பரிவின் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடுசெய்ய முடியாதிருந்தது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i) (ஈ) (iv) பரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் 1.2.2 ஆம் பந்தியின் (அ), (ஒ), (ஓ), (ஔ) மற்றும் 1.2.3 ஆம் பந்தியின் (ஆ), (இ), (ஊ), (எ), (ஏ) அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 3.13 ஆம் பந்தியின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நியமத்திற்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட 02 ஆம் | சகல விபரங்களையும் எதிர்காலத்தில் | அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட |

| | | |
|---|---|---|
| அத்தியாயத்தின் E.G 4.22 ஆம் பந்தியின் பிரகாரம் நீண்ட கால கடன் பெறல்களுக்குரியதாக உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெறப்பட்ட ரூபா 50,508,825 கடன் பணத்தின் வட்டி விகிதம், கடன் பணத்தின் கால எல்லை, கடன் பணம் பெறப்பட்ட திகதி, கடன் பணம் செலுத்த வேண்டிய திகதி, கடன் பணத்தின் நிபந்தனை, கடன் பணம் பெறப்பட்ட நோக்கம், வைக்கப்பட்டுள்ள பிணை மற்றும் கடன் உடன்படிக்கையில் ஏதாவது விஷேட நிபந்தனைகள் உள்ளனவாயின் அவை நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண திறைசேரி அறிக்கையின் பிரகாரம் காணப்பட்ட மீளாய்வாண்டிற்குரிய நீதிமன்ற தண்டப் பண வருமானம் ரூபா 27,252,951 தொகை மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 8,240,021 தொகை என்பன நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். தேவையான சீராக்கங்களை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 31,413,952 பெறுமதியான நிலையான சொத்துக்கள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகணரங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்டுள்ள ஆலோசனையின் பிரகாரம் சீராக்கங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சில சீராங்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கணக்கீடு செய்யப்படாத நிலையான சொத்துக்களை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்குரியதாக கிடைக்க வேண்டிய வியாபார வரி மற்றும் கைத்தொழில் வரிகள் முறையே ரூபா 114,600 மற்றும் ரூபா 70,000 தொகை என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். புதிய கணக்குகளின் மூலம் சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் பணமாக கிடைக்கப்பெற்ற ரூபா 49,183,891 தொகையான வேலை கடன்பட்டோர் பெறுவனவுகளை கவனத்தில் கொள்ளாமல் ஆண்டின் இறுதியில் கடன்பட்டோர் மீதியாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு புத்தகங்களை நாளதுவரையாக பேணிச்செல்லல் வேண்டும். |
| (உ) | பிரதேச அபிவிருத்தி புரிந்துணர்வு செயற்திட்டத்திற்குரியதாக அரசாங்க வங்கியொன்றில் பேணப்பட்ட 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு மீதி ரூபா 2,036,341 தொகை நடைமுறை சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உரிய பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஊ) | உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் அத்தியாயம் 02 இன் பிரகாரம் ஆம் அத்தியாயத்தின் இலக்கம் 205 என்ற குறியீட்டு இலக்கத்தின் படி ரூபா 3,899,826 பெறுமதியான நூலக புத்தகங்கள் நடைமுறைச் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நூலக புத்தகங்கள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (எ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான விளம்பர அறிவித்தல் பதாதை வருமானமாக இனங்காணப்பட்டிருந்த ரூபா 1,673,725 தொகை 2019 யூலை 31 இல் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை வருமானமாக இருந்ததுடன், 2019 யூலை 31 ஆம் திகதியின் பின்னர் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நிலுவை வருமானம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். உரிய நிறுவனங்களில் இருந்து பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த வருமானத்தை அறவிடுவதற்கோ அல்லது அனுமதியற்ற அறிவித்தல் பதாதைகளை கழற்றி அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 12 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரமாக பெறுமதி ரூபா 846,670,763 ஆகவும், பட்டோலைகளின் பிரகாரம் பெறுமதி ரூபா 834,892,327 ஆகவும், இருந்தமையால் ரூபா 18,257,792 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வேறுபாடுகளை இணக்கம் செய்து மீதியை சரிசெய்தல் வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 189,081,395 கூட்டுத் தொகையான 13 கணக்கு விடயங்களுக்குரிய கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 11,557,729 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 27,579,736 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வீதவரியும் வரியும் | | |
| ரூபா 834,801 தொகையான வீதவரி மற்றும் வரிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிடியாணை விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், நாட்டில் காணப்படுகின்ற தொற்றுநோய் நிலைமையின் காரணமாக கொள்வனவுப் பணக் குறைபாடுகளினால் இயலுமான வரை நிலுவை பணம் அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (ஆ) ஏனைய வருமானம் | | |
| பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 18 தொலைபேசி கோபுரங்களுக்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 152 ஆம் இலக்கத்தின் கீழ் காண்பிக்கப்படுகின்ற வியாபார வரியாக வருடாந்தம் ரூபா 3,000 வரித் தொகை பிரதேச சபைக்கு அறவிட வேண்டியிருந்த போதிலும், சபை அதிகார பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த எந்தவொரு தொலைபேசி கோபுரங்களில் இருந்தும் 2009 ஆம் ஆண்டு முதல் அந்த வரி தொகை அறவிடப்படாதிருந்தமையால் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 432,000 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | சபை அதிகார பிரதேசத்தில் எந்தவொரு கோபுரங்களில் இருந்தும் வரித் தொகை அறவிடப்படாதிருந்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. பணத்தை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |